**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 16.12.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகளுக்கான பயணத்தின் 2ஆம் கட்டமாக, ஜோர்டானில் இருந்து இன்று மாலை, எத்தியோப்பியா சென்றடைகிறார்.

**விக்சித் பாரத்-கிராமப்புற வேலை வாய்ப்பு, மற்றும், வாழ்வாதார உறுதியளிப்பு மசோதா,** மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

1971ஆம் ஆண்டுப் போரில் இந்தியா வெற்றி பெற்றதைக் குறிக்கும் **விஜய் திவஸ்-** வெற்றி தினம், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், இன்று கொண்டாடப் பட்டது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், S-I-R கணக்கெடுப்புப் பணிகளை தொடர்ந்து இன்று வெளியிடப்பட்ட **வரைவு வாக்காளர் பட்டியலில்,** சுமார் 9 லட்சத்து, 18ஆயிரம் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

-----------------------------

மோடி-எத்தியோப்பியா (15)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகளுக்கான பயணத்தின் 2ஆம் கட்டமாக, ஜோர்டானில் இருந்து இன்று மாலை, எத்தியோப்பியா சென்றடைகிறார். எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா-வில், அந்நாட்டு பிரதமர் டாக்டர் அபியகமது அலியை அவர் சந்தித்து, விரிவான

பேச்சு வார்த்தைகளில் ஈடுபட இருக்கிறார். எத்தியோப்பிய நாடாளுமன்றத்தின் கூட்டு அமர்விலும் அவர் உரையாற்றுவார். பிரதமர் திரு. நரேந்திர மோடி எத்தியோப்பியா செல்வது, இதுவே முதல்முறையாகும். இப்பயணத்தின் போது, வேளாண்மை, சுரங்கம், டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு, சோலார் கூட்டமைப்பு, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

எத்தியோப்பியாவில் உள்ள சுமார் 2 லட்சம் இந்திய சமூகத்தினர், பிரதமர் திரு. நரேந்திர மோடியை வரவேற்க, ஆர்வத்துடன் காத்திருப்பதாகவும், அடிஸ் அபாபா நகரில், பல இடங்களில், இந்தியக் கொடி ஏற்றப்பட்டு, **வண்ணமிகு பேனர்கள்** வைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

---------------------------

*மோடி-ஜோர்டான் 1 (14)*

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஜோர்டான் பயணத்தினால், அரசியல், பொருளாதாரம், மற்றும், கலாச்சார ரீதியில், கணிசமான பல்வேறு பலன்கள் ஏற்பட்டுள்ளதாக, மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தெற்குலக நாடுகளுக்கான வெளியுறவுத் துறைச் செயலர் டாக்டர் நீனா மல்ஹோத்ரா, இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், ஜோர்டானில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்திய இருதரப்பு பேச்சு வார்த்தைகளில், தீவிரவாத ஒழிப்பிற்கு, முக்கியத்துவம் அளிக்கப் பட்டதாகவும், இதில் இந்தியாவின் நிலைப்பாடுகளுக்கு,

ஜோர்டான், வலுவான ஆதரவு வெளியிட்டுள்ளதாகவும் கூறினார். பாஸ்பேட் உரங்களை இந்தியாவிற்கு வழங்கும் முக்கிய நாடான ஜோர்டானில் இத்துறை தொடர்பான முதலீடுகளை அதிகரிக்க, இருநாட்டு நிறுவனங்களும் ஆலோசித்து வருவதாகவும், அடுத்த 5 ஆண்டுகளுக்குள், இருதரப்பு வர்த்தகத்தை, 5 பில்லியன் டாலராக உயர்த்த, பிரதமர் திரு. நரேந்திர மோடி உத்தேசம் வெளியிட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பிரதமரின் ஜோர்டான் பயணம் குறித்து, கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*மோடி-ஜோர்டான் 2 (17)*

**(வாய்ஸ்)**

பிரதமரின் ஜோர்டான் பயணத்தின் போது, இந்தியாவிற்கும், ஜோர்டானுக்கும் இடையே, புதுப்பிக்கவல்ல எரிசக்தி, நீர் சேமிப்பு, டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இறுதியாகி உள்ளன. இந்தியாவின் எல்லோரா, மற்றும், ஜோர்டானின் பெட்ரா பகுதிகளை, இரட்டை சுற்றுலா பகுதிகளாக அறிவித்து, சுற்றுலா, மற்றும், கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்தவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜோர்டான் மன்னர் 2ஆம் அப்துல்லா ஆகியோர், அம்மானில், இந்தோ-ஜோர்டான் வர்த்தகப் பேரவைக் கூட்டத்தில், கூட்டாக உரையாற்றினர். இந்தியாவிற்கும்,

ஜோர்டானுக்கும் இடையிலான உறவுகளில், வரலாற்றுப்பூர்வ நம்பிக்கை, எதிர்காலப் பொருளதார வாய்ப்புகள் ஆகிய இரண்டும் இணைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இந்திய நிறுவனங்கள், ஜோர்டான் மூலமாக, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளின் சந்தைகளையும் அணுக முடியும் என, ஜோர்டான் மன்னர் கூறினார். காசா நிலவரம் உட்பட, பரஸ்பர அக்கறை உள்ள பிராந்திய, மற்றும், சர்வதேச பிரச்சனை குறித்தும், இப்பயணத்தின் போது விவாதிக்கப்பட்டது.

-----------------------------

*மக்களவை வேலை உத்தரவாதம் 1 (18)*

**விக்சித் பாரத்-கிராமப்புற வேலை வாய்ப்பு, மற்றும், வாழ்வாதார உறுதியளிப்பு மசோதா,** மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு** மாற்றாக தயாரிக்கப் பட்டுள்ள இம்மசோதாவை, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான், அவையில் தாக்கல் செய்தார். வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான சட்டக் கட்டமைப்பை, **விக்சித் பாரத் நோக்கங்களுக்கு** ஏற்றபடி, நவீனமாக மாற்றுவதே, இம்மசோதாவின் நோக்கம் என்றும், கிராமங்களை, சுயசார்புடன் கூடிய ஊரக பகுதிகளாக மேம்படுத்த, இத்திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். புதிய மசோதாவின்படி, **கிராமப்புற குடும்பங்களின் விருப்பமுள்ள உறுப்பினர்களுக்கு, குடும்பத்திற்கு 125 நாள் வேலை வழங்கப்படும்** என்றும்,

இதற்கென, சுமார 1 லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு, மசோதாவில் வகை செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, ஏழைகளுக்குப் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை அமல்படுத்தி வருவதாகவும், **ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக் காலத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு**, மொத்தம் 2 லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

*மக்களவை வேலை உத்தரவாதம்* 2 (7)

கிராமப்புற மேம்பாடு குறித்து, மகாத்மா காந்தி கனவு கண்ட **ராம ராஜ்யத்தை** உருவாக்க, அரசு பாடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். **விக்சித் பாரத் - ஜி ராம் ஜி** மசோதா என சுருக்கமாக அழைக்கப்படும் புதிய **வேலை உறுதியளிப்பு** மசோதாவை ஆட்சேபித்து, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர் கட்சி உறுப்பினர்கள், அவையின் மையப் பகுதியில் கூடி, அமளியில் ஈடுபட்டதால், மக்களவையின் அலுவல்கள், பிற்பகல் 2 மணி வரை, ஒத்தி வைக்கப்பட்டன.

----------------------------

*விஜய் திவஸ்* (10)

1971ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரில் இந்தியா வெற்றி பெற்றதைக் குறிக்கும் **விஜய் திவஸ்-** வெற்றி தினம் இன்று கொண்டாடப்படுகிறது. போரில் உயிர்த் தியாகம் செய்து, நாட்டிற்கு, **சிறப்பான வெற்றி** பெற்றுத் தந்த வீரர்களுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன்,

பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா ஆகியோர் புகழாரம் சூட்டியுள்ளனர்.

விஜய் திவாசை முன்னிட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் புதுடெல்லியிலுள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். முப்படைத் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

----------------------------

*புதுச்சேரி-விஜய் திவஸ் (8)*

புதுச்சேரியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், கடற்கரைச் சாலையில் உள்ள போர் வீரர் நினைவுச் சின்னத்தில், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா ஏ.கே.டி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்ற தட்சிணாமூர்த்தி, மற்றும், தலைமைச் செயலர்-செய்தி விளம்பரத் துறைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

----------------------------

S-I-R *புதுச்சேரி 1 (17)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கடந்த 11 ஆம் தேதியுடன் முடிவடைந்த S-I-R கணக்கெடுப்புப் பணிகளை தொடர்ந்து, **திருத்தப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை**, மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் புதுச்சேரியில் இன்று வெளியிட்டார். இந்த வரைவு வாக்காளர்

பட்டியலில், மொத்தம் 9 லட்சத்து, 18ஆயிரத்து, 111 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை, கணக்கெடுப்புப் பணிகளுக்கு முன்னர் இருந்த வாக்காளர் பட்டியலுடன் ஒப்பிடுகையில், சுமார் 10 சதவிகிதம் குறைவாகும். பழைய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த வாக்காளர்களில், மரணம், நிரந்தர இடப்பெயர்வு, ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பெயர்ப் பதிவு உள்ளிட்ட காரணங்களுக்காக, சுமார் 1 லட்சத்து 3 ஆயிரம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டு, புதிய வரைவுப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. வரைவுப் பட்டியல் வெளியிடப் பட்டதை தொடர்ந்து, தகுதி உள்ள வாக்காளர்கள் விடுபட்டு போயிருந்தால், கோரிக்கைகள், மற்றும் ஆட்சேபணைகளை, இன்று முதல், அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை, சமர்ப்பிக்கலாம் என்றும், கோரிக்கைகள், மற்றும், ஆட்சேபணைகைள் பரிசீலிக்கப்பட்டு, இறுதி வாக்காளர் பட்டியல், பிப்ரவரி 14ஆம் தேதி வெளியிடப்படும் என்றும், திரு. ஜவஹர் தெரிவித்தார். பழைய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற

S-I-R *புதுச்சேரி* 2 (10)

வாக்காளர்களில், 2002ஆம் ஆண்டு S-I-R பட்டியலுடன் சம்பந்தப்படுத்த முடியாமல் போன சுமார் 71 ஆயிரம் UnMapped வாக்காளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படும் என்றும், இவர்கள், அங்கீகரிக்கப்பட்ட 13 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பித்து, வாக்காளர் பட்டியலில் பெயரைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்றும், அவர் கூறினார். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஏற்கனவே 962 வாக்குச் சாவடிகள்

இருந்த நிலையில், தற்போது கூடுதலாக 137 வாக்குச் சாவடிகள் சேர்க்கப்பட்டு, வாக்குச் சாவடிகளின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 99 ஆக உயர்த்தப் பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் பேட்டியில் இருந்து, ஒரு பகுதி....

**(வாய்ஸ்-ஜவஹர்)**

----------------------------

S-I-R குலோத்துங்கன் *(9)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான வரைவு வாக்காளர் பட்டியலில், புதுச்சேரி மாவட்டத்தில் இருந்து, 7 லட்சத்து 66 ஆயிரத்து 244 வாக்காளர்களும், காரைக்கால் மாவட்டத்தில் இருந்து, 1 லட்சத்து 51 ஆயிரத்து 867 வாக்காளர்களும் இடம்பெற்றுள்ளனர். புதுச்சேரி மாவட்டத்திற்கான வரைவு வாக்காளர் பட்டியலை, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், புதுச்சேரியில் இன்று வெளியிட்டார். புதுச்சேரி மாவட்டத்தில், மரணம், நிரந்தர இடப்பெயர்வு, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பெயர்ப் பதிவு உள்ளிட்ட காரணங்களால், 85 ஆயிரத்து, 531 வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

----------------------------

*விசிஆர்சி* (6)

புதுச்சேரி, கோரிமேட்டிலுள்ள **விசிஆர்சி**-கொசு நோய் ஆராய்ச்சிக் கழகத்தின் பொன்விழா கொண்டாட்டங்களை, இன்று, துணைநிலை ஆளுநர்

திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், மற்றும், விசிஆர்சி இயக்குநர் டாக்டர் மஞ்சு நெகி, மற்றும், தலைமைச் செயலர்- சுகாதாரத்துறை செயலர் உள்ளிட்ட அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

-----------------------------

*ராகுல் வழக்கு* (10)

**நேஷனல் ஹெரால்ட்** பத்திரிக்கைக்கு சொந்தமான 2 ஆயிரம் கோடி ரூபாய் சொத்துக்களை 50 லட்சம் ரூபாய்க்கு வாங்கியதாக, காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி உள்ளிட்டோர் மீது, அமலாக்கத் துறை பதிவு செய்த **பணச் சலவை** வழக்கை விசாரணைக்கு ஏற்க, டெல்லி **ரவுஸ் அவென்யூ** சிறப்பு நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. நடப்பு நிலையில், நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க இயலாது என்றாலும், அமலாக்கத் துறையினர், புலனாய்வை தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது. நீதிமன்ற உத்தரவை ஆட்சேபித்து மேல் முறையீடு செய்யப் போவதாக அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகளுக்கான பயணத்தின் 2ஆம் கட்டமாக, ஜோர்டானில் இருந்து இன்று மாலை, எத்தியோப்பியா சென்றடைகிறார்.

**விக்சித் பாரத்-கிராமப்புற வேலை வாய்ப்பு, மற்றும், வாழ்வாதார உறுதியளிப்பு மசோதா**, மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

1971ஆம் ஆண்டுப் போரில் இந்தியா வெற்றி பெற்றதைக் குறிக்கும் **விஜய் திவஸ்-** வெற்றி தினம், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், இன்று கொண்டாடப் பட்டது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், S-I-R கணக்கெடுப்புப் பணிகளை தொடர்ந்து இன்று வெளியிடப்பட்ட **வரைவு வாக்காளர் பட்டியலில்**, சுமார் 9 லட்சத்து, 18ஆயிரம் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

## இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது